# பாதுகாப்பு விசாக்கள் திணைக்களத்தின் நேர்காணல்

## நேர்காணலுக்கு முன்

உள்நாட்டலுவல்கள் திணைக்களத்தில் (DHA) உங்கள் பாதுகாப்பு விசா நேர்காணலில் கலந்து கொள்ளுமாறு நீங்கள் ஒரு அறிவிப்பைப் பெறும்போது, எங்கு செல்ல வேண்டும், அங்கே நீங்கள் எப்படி நேரத்திற்குச் செல்வீர்கள் மற்றும் குழந்தைப் பேணல் போன்றவற்றை ஒழுங்குபடுத்தியுள்ளீர்களா என்பதை நீங்கள் உறுதிசெய்து கொள்ளுங்கள்,

நேர்காணலுக்கு முன்னர், நீங்கள் DHA க்கு வழங்கிய உங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்ட அறிக்கையை மறுபடியும் வாசிப்பதை உறுதிப்படுத்தவும், அத்துடன் அதில் என்ன கூறப்பட்டிருக்கின்றது என்பதைச் சரியாகத் தெரிந்து வைத்திருங்கள். நீங்கள்  புதிய தகவல்களைக் கண்டறிந்திருந்தால், நேர்காணலுக்கு முன்னர் நீங்கள் அதை அனுப்ப வேண்டும் அல்லது நேர்காணலின் தொடக்கத்தில் DHA அதிகாரிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

## நேர்காணலில்

1. குடிவரவு அதிகாரி உங்களுக்கு உரைபெயர்ப்பாளரை அறிமுகம் செய்வார்.உரைபெயர்ப்பாளரை உங்களால் புரிந்து கொள்ள முடியாவிட்டால், நீங்கள் முதலில் ஆறுதலாகச் சொல்லும் படியும்,  அவர்கள் சொன்னதை மீண்டும் கூறும் படி கேட்க வேண்டும். இது உதவாது என்றால், அல்லது வேறு பிரச்சனைகள் இருந்தால், நீங்கள் அந்த அலுவலரிடம் சொல்ல வேண்டும், ஏன் என்று சொல்லுங்கள். நேர்காணல் இன்னொரு நாளுக்கு வைக்கப்பட்டு  வேறு உரைபெயர்ப்பாளருடன் ஆரம்பிக்கப்படும் என்ற அர்த்தமாகும்..

2. குடிவரவு அதிகாரி வழக்கமாக, ஆனால் எப்போதும் இல்லை, விசா விண்ணப்ப செயல்முறை மற்றும் ஒரு அகதி என்றால் யார் என்பவை  பற்றிக் கூறி நேர்காணலை ஆரம்பிப்பார்.

3. நீங்கள் உண்மையைச் சொல்ல வேண்டும். நீங்கள் ஒரு சமய நம்பிக்கையாளர் என்றால் ஒரு மதப் புத்தகத்தின்மீது உண்மை சொல்லப் போவதாகச் சத்தியத்தைச் செய்யப்

போகிறீர்களா அல்லது ஒரு வாக்குறுதியை நீங்கள் செய்யப்போகிறீர்களா என்று குடிவரவு அதிகாரி உங்களைக் கேட்கலாம்.

4. அதிகாரி சோதித்துப் பார்ப்பதற்காகப் பல விவரமான கேள்விகளைக் கேட்பார்:

- உங்கள் அடையாளம்
- நீங்கள் உண்மையைக் கூறுகின்றீர்களா
- உங்கள் சொந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்டால் நீங்கள் தீங்கினால் துன்புறும் சாத்தியக்கூறு எவ்வாறு உள்ளது
- அந்தத் தீங்கு உங்களுக்குக் கடுமையானதாக இருந்தால் உங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியிருக்கும்.

5. அதிகாரி பின்வருவனவற்றைச் சோதித்துப் பார்க்கக் கேள்விகளைக் கேட்பார்:

- நீங்கள் ஏற்கனவே உங்கள் அறிக்கையில் கொடுத்துள்ள தகவல்களைச் சோதித்துப் பார்க்க
- நீங்கள் முன்னர் கூறியுள்ளவற்றிற்கும் இப்போது கூறுவதற்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கின்றதா என்பதைச் சோதித்துப் பார்க்க
- DIBP அதன் ஆராய்ச்சி மூலம் பெற்ற தகவல்களுக்கு எதிராக உங்கள் கதையை சோதித்துப் பார்க்க

6. உங்களால் ஞாபகப்படுத்திக் கொள்ளும் அளவுக்கு உங்கள் முழுக் கதையையும் சொல்லுங்கள். மற்றவர்களிடமிருந்து கேட்ட தகவல்களை உருவாக்காதீர்கள் அல்லது சேர்க்காதீர்கள். ஏதாவது உங்கள் நினைவில் இல்லை என்றால், அதை உருவாக்க வேண்டாம். உங்கள் நினைவில் இல்லை என்று சொல்லுங்கள்.

7. நீங்கள் முன்னர் குடிவரவுக்கு வழங்கிய தகவல்களுடன் உங்கள் கதையில் வேறுபாடுகள் ஏதாவது இருந்தால், வேறுபாடுகள் ஏன் இருக்கின்றன என்பதை விளக்கவும்.

8. குடிவரவு அதிகாரி பல விடயங்களைப் பற்றி உங்களிடம் கேள்விகளைக் கேட்கலாம். அதிகாரி பின்வருவனவற்றை வைத்திருப்பார்:

    - ஆஸ்திரேலியாவில் செயலாக்கம் செய்யும் அனைத்து கட்டங்களிலும் நீங்கள் வழங்கிய தகவல்கள்
    - ஆஸ்திரேலியா தவிர வேறு நாடுகளுக்குச் செய்த அனைத்துப் பயணப் பதிவேடுகள்.
    - சமூக ஊடகத்தில் நீங்கள் பகிர்ந்துள்ள தகவல்கள் (எ.கா. முகநூல்)
    - பிற தரப்பினர்களிடமிருந்து பெற்ற தகவல்கள்

9. உங்கள் கதையில் சந்தேகத்தை ஏற்படுத்தும் ஏதாவது தகவல்கள் அதிகாரியிடம் இருந்தால் அவற்றை அவர் உங்களிடம் சொல்ல வேண்டும், மேலும் விளக்கிக்கொள்ள உங்களுக்கு ஒரு வாய்ப்பளிக்கவும் வேண்டும். அவர்கள் தவறான தகவல்களைக்

கொண்டிருக்கிறார்கள் அல்லது முழு கதையும் அவர்களிடம் இல்லை என்று நீங்கள் நினைத்தால், நீங்கள் அதனைச் சொல்ல வேண்டும் அத்துடன் உங்களால் முடியமென்றால் அவர்கள் தவறு என்று ஏன் நீங்கள் நினைக்கிறீர்கள் என்பதையும் விளக்குங்கள்.

10. குடிவரவு அலுவலரின் கவலைகள் குறித்து பதில் வழங்கக்கூடிய தகவல்களை நேர்காணலுக்குப் பின்னர் உங்களால் வழங்கமுடியுமென்றால் அவ்வாறு சொல்லுங்கள். பின்னர் அந்த நேர்காணலுக்குப் பிறகு அந்தத் தகவல்களை வழங்க வேண்டும். தவறான அல்லது தயாரிக்கப்பட்ட தகவல்களை நீங்கள் கொடுத்தால், வழக்கமாகக் கண்டுபிடிக்கலாம் என்றால் நீங்கள் விடயங்களை உருவாக்கியதாக அதிகாரி நினைத்தால் அது உங்கள் வழக்கை மிகவும் மோசமாகப் பாதிக்கும்.

11. நேர்காணலுக்குப் பிறகு நீங்கள் மேலும் தகவல்களை அனுப்ப வேண்டுமென்று அதிகாரி விரும்பினால் நீங்கள் அனுப்ப வேண்டிய காலத்தை உங்களுக்கு வழங்குவார். நீங்கள் நேரம் போதாது என்று நினைத்தால், அதிகாரிக்குச் சொல்லுங்கள். கூடுதலான நேரம் வழங்கமுடியுமா என்று கேளுங்கள்.

## நேர்காணலுக்குப் பிறகு

நேர்காணலுக்குப் பிறகு, அதிகாரி முடிவெடுக்கும் முன், நீங்கள் பெற்ற புதிய தகவல்களை நீங்கள் கொடுக்கலாம், ஆனால் அவை உண்மையானவை என்பதை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும்l.

தவறான அல்லது மிகைப்படுத்தப்பட்டதாகத் தோன்றும் தகவல்களை நீங்கள் வழங்கினால்,

( இப்பொழுது இருப்பதை விட மோசமாக்கப்பட்டால்) அது உங்கள் வழக்கை நன்றாக ஆக்குவதற்காகச் செய்தால், நீங்கள் உண்மையிலேயே வாய்மை இல்லாதவர் என்று அதிகாரி சிந்திக்கக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அத்துடன் உங்கள் கதைகளின் மற்றப் பகுதிகளை நம்பக்கூடிய வாய்ப்புக் குறைவாக இருக்கும்.

நேர்காணலுக்கு முன்பு உங்கள் தகவல்கள் அனைத்தையும் வழங்குவது சாத்தியம் என்றால் இச் செயல் மிகவும் நன்றாக இருக்கும்

நேர்காணலுக்குப் பிறகு குடிவரவு மேலும் தகவல்களைக் கேட்டு உங்களுக்குக் ஒரு கடிதம் அனுப்பினால் அதை உங்களால் புரிந்து கொள்ள முடியாவிட்டால் புலப்பெயர்வு முகவரிடமிருந்து அறிவுரை பெற வேண்டும்..

## முடிவு

நீங்கள் மறுப்புக் கடிதத்தைப் பெற்றால், விரைவில் குடிவரவு ஆலோசனை பெற வேண்டும்.